# தமிழ்ச்செல்வி

# 1

அந்த ஆத்துமேட்டில் தன்னந்தனியாக அமைந்திருந்தது ஒரு ஓலைக்குடிசை. குடிசையின் பின் ஒரு சிறு சதுரமாய் உயிர் வேலி கட்டப்பட்டிருந்தது. சிறு தடுப்புக்குள் குளியலறை அதன் அருகே வலை அடைத்த கோழிக் கூண்டு. வேலியை அணைத்து ஒரு முருங்கை மரம் உயர்ந்திருந்தது.

விடிய இன்னும் முழுதாய் ஒரு மணி நேரம் இருந்தது.

தூக்கத்திலிருந்து கிழிந்த போர்வையை உதறிக் கொண்டு எழுந்தாள் தமிழ்ச்செல்வி.

தமிழ்ச்செய்வி வயது 23, மத்திய உயரம் கொண்டவள். கன்னங்கறுத்த அழகி, ஒன்பதாம் வகுப்பு வரை படித்தவள்.

காலைப்பணி கழிந்தது.

அலுமினிய டம்ளர்களில் நீராகாரம் ஊற்றப்பட்டது.

எல்லோரும் செங்கல்லை பொடி பண்ணி பல் துலக்கினர்.

நீராகாரம் பருகும்போது ஏதேனும் சோற்றுப்பருக்கை வந்து விட்டால் போனஸ்நாள். இரு பருக்கைகள் சிக்கின. ஆசையாய் தின்றாள் தமிழ்ச்செல்வி.

அவளின் ஒரே சொத்து ஒரு ஓட்டை டிரான்ஸிஸ்டர் தான்.

அதை திருகினாள். பாட்டு கேட்டாள்.



கூலி வேலைக்கு தாயும், தகப்பனும் புறப்படத் தயாராய் இருந்தனர். தங்கைகள் பள்ளிக்கூடத்துக்கு கிளம்பினர். வாசலில் ஒரு சைக்கிள் வந்து நின்று ஸ்டாண்ட் போடப்படுவது சப்தமானது தரகர் பொன்னுச்சாமி வந்தார்.

''உன் மூத்த பொண்ணு தமிழ்ச்செல்விக்கு என்ன வயசாகுது?''

''இருபத்தி மூணாகும். ஏன்?''

''முள்ளங்கி பத்தை மாதிரி ஆறு பொண்ணுகளை பெத்துட்ட. ஆறும் சடங்கோடு நிக்குது. ஒண்ணுக்கும் கூட வழி பண்ணாம கல்லுளி மங்கன் மாதிரி நீ இருந்தா எப்படி?''

''சரி... இங்க சோத்துக்கே லாட்டரி அடிச்சிட்டிருக்கம். கல்யாணமாவது கரிமாதியாவது?''

''புலம்பற பாத்தியா? உன் பொண்ணுகள்ல மூத்ததுக்கு ஒரு வழியோட வந்திருக்கேன்?''

''தமிழ்ச்செல்விக்கா?''

''ஆமா...உன் கைகாசு ஒரு நயா பைசா செலவழியாது. எல்லாம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பாத்துப்பாங்க பொண்ணை மட்டும் அனுப்பினா சரி...?''

''ஏதோ தடுக்குது. மாப்பிள்ளை யார்?''

''நான் என்ன கூன், குருடு, கிழடுகளையா காட்டுவேன். மாப்பிள்ளை செல்வம்;''

''யாரு? பார்வதியம்மா மகனா?''

''அவனேதான். ஆளு சும்மா நடிகர் நெப்போலியன் மாதிரி இருப்பான். லட்சக்கணக்கான சொத்து. வீட்டுக்கு ஒரே மகன்!''

''சீ எந்திரிய்யா.. எத்தினி நாளா என் குடி கெடுக்க திட்டம்?''

''அவசரப்படுற பார்?''

''என்னய்யா பேத்ற! அந்த செல்வம் பொல்லாக் குடிகாரன். மீன் குஞ்சு தண்ணில நீந்துற மாதிரி அவன் சாராயத்ல நீந்துரவன். அவனுக்கு போய் என் மகளையா? அதுக்குப் பதிலா அவளை ஒரு பாழுங்கிணத் துல தள்ளலாம்!''

''நீ எந்தக் காலத்ல இருக்கிற பெருசு? குடிகாரனை கேவலமா இழிவா பாத்தது அந்தக்காலம். இப்பல்லாம் குடிக்கறவனுக்குத்தாய்யா சமூகத்ல முதல் மரியாதை. அவன் என்ன நாட்டுச் சரக்கா அடிக்கிறான்? எல்லாம் பாரீன்ய்யா...''

''அப்புறம் அவங்க ஏன் என் வீட்ல பொண்ணு எடுக் கணும்?''

''அதாய்யா பார்வதியம்மாவோட ராஜ தந்திரம். தன் தகுதிக்கு பெண் எடுத்தா மருமக வாய்க்கு வாய் பேசுவா. ஏழையில பொண்ணு அடங்கி நடக்கும். பணத்தை விட அழகிருந்தா போதும்னு நினைக்கிறாங்க. அந்தம்மா நிறைய தரம் உன் பொண்ணு தமிழ்ச்செல்விய பாத் திருக்கு. உன் பொண்ணோ சுறுசுறுப்பு அந்தம்மாவுக்கு ரொம்ப பிடிச்சுப்போச்சு. அதான் என்னைவிட்டு பொண்ணு கேக்க சொன்னாங்க...''

''நீ என்ன சொன்னாலும் சரி ..நான் தயாரில்லை...''

''நீ எந்த மாப்பிள்ளை தமிழ்ச்செல்விக்கு பார்த்தாலும் அவன் குடிக்க மாட்டான்னு என்ன உத்தரவாதம்? அவன் தகுதிக்கு மதுக்கசாயமும், வேலி மூட்டியும் அடிச்சிக்கிட்டுத் தான் இருப்பான்!''



''வாதம் பண்ணாதே!''

இன்னும் பலவிதமாய் தூண்டில் போட்டுப் பார்த்தார் தரகர். தமிழ்ச்செல்வியின் தாய்க்கு ஆசை துளிர்த்தது.

கணவனை ஒத்துக்கச்சொல்லி சைகை காட்டினாள்.

தந்தை இறங்கி வந்தார்.

''நீங்க சொல்றதிலேயும் நியாயம் இருக்கு. ஆனா ஒரு வார்த்தை... என் பொண்ணோட அபிப்ராயம் கேட் டுக்க வேணாம்!''

''கழுத கழுத்த நீட்டுன்னா நீட்டிறப்போவுது. அதப் போய் கேட்டுக்கிட்டு, சரி உன் ஆசை அத ஏன் கெடுப்பா னேன். கேளேன்..''

தந்தை எழுந்து வந்தார்.

பீடி சுற்றுவதை நிறுத்தினாள் தமிழ்ச்செல்வி.

''வாழ்வதே ஒரு நரகம்தான், புதிதாக என்ன ஒரு நரகம் வந்துவிடப்போகிறது. பெற்றோருக்கும், தங்கை களுக்கும் உதவுவோம்.''

''நாங்க பேசினதை கேட்டல்ல தமிழ்ச்செல்வி!''

''ஆமா!''

''உன் முடிவு என்ன?''

''நான் அந்த பார்வதியம்மா மகனை கட்டிக்க முழு மனசா சம்மதிக்கிறேன்!'' என்றாள் உறுதியாக.

கல்யாண நரகம் இரும்பு வாசலை திறந்து தமிழ்ச் செல்வியை வரவேற்றது!

நள்ளிரவு மணி இரண்டு.

பார்வதியம்மா தூக்கம் வராது தவித்தாள்.

எழுந்து மணப்பெண்ணின் அறைக்கு நடந்தாள்.

தங்கைகளை கட்டிப்பிடித்த வண்ணம் சுருண்டு படுத்திருந்தாள் தமிழ்ச்செல்வி.

பார்க்கவே இரக்கம் சுரந்தது.

பணத்தைக் காட்டி இந்த வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கையை கெடுத்துவிட்டோமோ ..?

செல்வம் ஒரு திருந்தாத கழுதையாயிற்றே அது எங்கு காகிதம் மேய்கிறதென்று பார்ப்போம்...

தாழ் போடாமல் சாத்தியிருந்த கதவை சத்தமில்லாமல் நகர்த்தினாள்.

அலங்கோலமாய் ஆடவர் கூட்டம்.

செல்வத்தின் நிலையைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனாள் பார்வதியம்மா.

அட சண்டாளா! இன்னைக்குமா இப்படி குடித்து ஆடியிருக்கிறான்.

முகூர்த்தம் விடிகாலை ஆறிலிருந்து ஏழரைக்கு, இன்னும் மூன்றரை மணி நேரம்தான். ஓடிப்போய் தனது வேலையாட்களை எழுப்பினாள்.

''எந்திரிச்சு வாங்கடா!''

எழுந்து வந்தனர்.

''உங்க சின்ன முதலாளியை பாத்ரூமுக்கு தூக்கிட்டு வாங்கடா...''

தூக்கி வந்தனர்.

புடவையை இழுத்து இடுப்பில் செருகிக்கொண்டாள். முப்பது வயது மகனை நிர்வாணம் பண்ணினாள். வெந்



நீரில் குளிக்க வைத்தாள். போதையை முறிக்க டிடிகாக்ஷன் புகட்டினாள். முகத்தில் மாறி மாறி அறைந்தாள்.

அப்படியும் தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை போல் அல்லாடினான் செல்வம்.

உடல் துவட்டி விட்டாள்.

ஆடைகளை உடுத்தி அவனை சேரில் அமர வைத்தாள்.

''பிடிச்சுக்கங்கடா.. த பார் மணி மூணாகுது. இன்னும் மூணே மணி நேரம். அய்யாவுக்கு போதை குறைஞ்சா திரும்பவும் தண்ணி அடிக்க போயிடுவான் . தாலி கட்ற நேரத்ல ரசாபாசம் ஆயிடும். எனக்கு இந்த திருமணம் முக்கியம். அதைவிட என் கௌரவம் முக்கியம். இந்தப் பயலை எங்கயும் விடாம இறுக்கி பிடிச்சு வையுங்கடா. சின்ன முதலாளின்னு பாக்காதீங்க. வம்பு பண்ணினா ரெண்டு போடு போடுங்க. தாலி கட்ற நேரத்ல ஏதாவது ஏடாகூடமாச்சுதுனா நீங்கதான்டா பொறுப்பு!''

''கவலையே படாம போங்கம்மா... நாங்க பாத்துக்கறம்!''

செல்வம் விழித்தான்.

''எலய் ..என்னங்கடா சேர்ல கட்டிப்போட்ருக்கீங்க?''

''அம்மா உத்திரவுங்க எசமான். மன்ச்சிடுங்க...''

''அவ கிடக்கா. என் ரூம்ல ஒரு குவார்ட்டர் விஸ்கி வைச்சிருக்கேன். கொண்டு வந்து என் வாய்ல ஊத்துங்கடா!''

''முடியாதுங்க...!''

''என் உப்பைத்தின்னுட்டு எனக்கே அல்வா குடுக்றீங்களாடா?'' கொதித்தான்.

''கட்டை அவிழ்த்து விடுங்கடா!''

''முகூர்த்தம் முடியுற வரைக்கும் வாலை சுருட்டிட்டு இருங்க எசமான். தாலி கட்டி முடிஞ்சதும் நாங்களே உங்களை சரக்குல போட்டு குளிப்பாட்டிர்றோம்!''

வெறியும், ஆத்திரமும் எல்லையில்லாமல் பொங்கியது.

சேரை நான்கு முறை உலுக்கிவிட்டு ஓய்ந்தான் செல்வம்.

இரவு விஸ்கி டம்ளரில் போட்ட ஐஸ் கட்டியாய் கரைந்தது.

போதை தெளிந்து சூரியன் கிழக்கில் சோம்பல் முறித்தான்.

தமிழ்ச்செல்விக்கு அலங்காரம் நடந்து கொண்டிருந்தது. ரத்தச்சிவப்பு பட்டுப்புடவையில் தேவதையாய் மின்னினாள்.

தமிழ்ச்செல்வி தலையில் சொடக்கு முறித்து திருஷ்டி கழித்தாள் பார்வதியம்மா.

''என் கண்ணே பட்டுரும் போலிருக்கிறதே கண்ணு!''

தமிழ்ச்செல்வி புண்ணியத்தில் அவளது பெற்றோரும் தங்கைகளும் புதுத்துணி உடுத்தியிருந்தனர். நேற்றிலிருந்தே தங்கைகள் பலகாரங்களை விழுங்கிக்கொண்டேயிருந்தனர். அதைக்காண தமிழ்ச்செல்விக்கு லஜ்ஜை கலந்த சந்தோஷம்.



மகனிடம் வந்தாள் பார்வதியம்மா.

சீறினான். ''என்னையாடி கட்டிப்போட்ட?''

''உன் கல்யாணத்தன்னைக்கும் உன் நாய் புத்திய காட்டாதே. வாய் பேசாம தாலி கட்டல எனக்கு புள்ளையே பொறக்கலைன்னு முடிவு பண்ணி உன்னை விஷம் வச்சுக் கொன்னுடுவேன்!''

கையிலிருந்த பட்டு வேட்டி, பட்டுச்சட்டையை வீசினாள். ''இத இவனுக்கு கட்டிவிடுங்கடா!''

கட்டி விட்டனர்.

மகனிடம் குனிந்தாள். ''எங்கே வாய ஊது!''

''வேணாம் சும்மாரு ..''

''ஊதுரான்னா...''

ஊதினான். முகம் சுளித்தாள்.

''கர்மம் . கர்மம்...எட்டு ஊருக்கு நாறுது!'' சென்ட் பாட்டிலை எடுத்தாள். ''வாயத்திற''

வாய்க்குள் சென்டை பீய்ச்சினாள்.

''தடுமாறாம நட. கை நடுக்கம் இல்லாம தாலி கட்டு!''

மணவறையில் செல்வம் அமர்ந்தான்.

ஊர் மக்கள், சொந்தபந்தம் எல்லாம் குழுமியிருந்தனர்.

நாதஸ்வர இசை முழங்கியது.

அய்யர் வேதங்களை உச்சரித்தார்.

மந்திரமும், நாதஸ்வரமும் உச்சத்தில் முழங்க...

நூறு திசைகளிலிருந்து அட்சதை தூவப்பட...

தமிழ்ச்செல்வியின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

முதல் முடிச்சு இடவே தட்டுத்தடுமாறினான் செல்வம்.

மூன்று முடிச்சுகளையும் பார்வதியம்மாவே போட்டு விட்டாள்.

மஞ்சள் நிறத்தில் தாலி என்ற பெயரில் ஒரு தூக்குக் கயிறு தமிழ்ச்செல்வி கழுத்தில் தொங்கியது.

## 2

முதலிரவு.

பார்வதியம்மா அதற்கான தனி அறையை தயார் பண்ணச் சொல்லியிருந்தாள்.

தமிழ்ச்செல்விக்கு ஏகப்பட்ட கற்பனைகள்.

பீடி சுற்றிச் சுற்றி உடலிலும் கைகளிலும் புகையிலை வாடை சதா அடிப்பதாய் பிரமை தமிழ்ச்செல்விக்கு. இரு கைகளிலும் மல்லிகைப்பூக்களை தேய்த்துக் கொண்டாள்.

எதிர்பார்ப்பில் இதயம் பிளாஸ்டிக் டப்பாவுக்குள் மாட்டிக்கொண்ட வெட்டுக்கிளிபோல் துடித்தது. கண்களுக்குள் கிறக்கமான கனவுகள்.

பட்டுப்புடவை சரசரக்க பால் செம்புடன் நடந்தாள் தமிழ்செவ்வி.



வழியில் பார்வதியம்மா குறுக்கிட்டாள்.

''அம்மா தமிழ்ச்செல்வி! என் மகன் ஒரு பெரும் குடிகாரன். திருமணத்துக்குப் பிறகாவது திருந்துவானா என்ற நப்பாசையில்தான் உன்னை கட்டி வைத்தேன். நல்லதோ கெட்டதோ நீதான் அவனை கொண்டு செலுத்த வேண்டும்...''

தமிழ்ச்செல்வி மிரட்சியாய் தலையாட்டனாள்.

அறைக்குள் காலடிகளை அளந்து வைத்து பிரவேசித்தாள்.

உள்ளே ஒரு 'திடுக்' காத்திருந்தது.

படுக்கையில் அலங்கோலமாக கிடந்தான் செல்வம். வேட்டி இடுப்பிலேயே இல்லை.

போதையில் யாரையோ திட்டிக்கொன்டிருந்தான்.

பால் செம்பை மேஜையில் வைத்துவிட்டு படபடப்பாய் அருகில் குனிந்தாள்.

''யாருடி அவ? என்னை முறைக்கறது?''

''நா நாந்தாங்க தமிழ்ச்செல்வி'''

''ஹெ...பேரப்பாரு... தமிழ்ச்செல்வி இங்கிலீஷ் செல்வின்னு... இங்க எதுக்கடி வந்த?''

''அ..அம்மாதான்...பா...பால் செம்பை...''

''எல்லாம் அந்த கிழட்டுச் சிறுக்கி வேலையா? நானா கல்யாணம்னு கேட்டேன். அவ விருப்பத்துக்குத்தான கட்டிவச்சா? அங்கேயே போய் தூங்கு!''

ஒன்றும் பேசாமல் அப்படியே நின்றிருந்தாள் தமிழ்ச்செல்வி.

''தள்ளிப்போடி'' கால்களால் எட்டித்தள்ளினான்.

''தடுமாற்றமாய் நகர்ந்தாள்.

''எழுந்தான்.''

''அட சட்! போதையே ஏறல ..'' மேஜை இழுப் பறையைத் திறந்து ஒரு குவார்ட்டர் பாட்டிலை வாய்க்குள் அப்படியே கவிழ்த்தான்.

''ஊறுகா எங்க?

''இ ..இல்லைங்க .''

''முட்டாப்பசங்க... பர்ஸ்ட் நைட்ல இனி சரக்கும், ஊறுகாயும் வைக்கச் சொல்லணும்?''

இரு ஜிலேபிகளை எடுத்து விழுங்கினான்.

''இன்னைக்கி ஒரு நாளாவது குடிக்காம இருந்திருக் கலாமில்ல?''

''அறிவுரை சொல்றியா வாயப்பேத்ருவேன்!'' நாக்கை மடித்து மிரட்டினான்.

செல்வத்துக்கு பயங்கரமாய் விக்கல் ஆரம்பித்தது.

ஓடிப்போய் தண்ணீர் எடுத்து வந்து நீட்டினாள்.

வாங்கி குடித்ததுதான் தாமதம்.

பெரும் சப்தத்துடன் படுக்கையிலேயே வாந்தி எடுத்து விட்டான்.

ஓங்கரித்து ஓங்கரித்து பெரும் சப்தமாய்...

விக்கித்துப்போய் நின்றிருந்தாள் தமிழ்ச்செல்வி.

அப்படியே சுழன்று அதே படுக்கையில் வீழ்ந்தான்.

அவனை இழுத்து கீழே போட முயன்றாள்.



விடியும்வரை அவளுக்குத் தூக்கமில்லை.

அவளுடைய கனவுகள், கற்பனைகள், ஆசைகள் எல்லாம் நொறுங்கி நிர்மூலம் ஆகியிருந்தன. இனி தினம் தினம் இந்தக்கூத்துத்தான்.

விடியலுக்கு கட்டாயம் கூவி சேவல்குரல் கொடுத்தது.

வாசல் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

பண்ணை வீடு, அதனைச் சுற்றி விஸ்தீரணமாய் பச்சை வயல்.

களத்து மேட்டில் இருபதுக்கு மேற்பட்ட பெண்கள் புளி குத்திக்கொண்டிருந்தனர்.

மலையமான் மிடுக்காய் டயர் செருப்பு சப்தம் எழுப்ப நடந்து வந்தார்.

களத்து மேட்டை பார்த்தபடி சேரில் அமர்ந்தார்.

கைத்தடிகள் காலடியில் அமர்ந்திருந்தனர்.

''ஏண்டா! புளி குத்றவல்ல பீச்சாங்கை கடைசில உக்கார்ந்ருக்காளே...அவ யாருடா? அசத்தலா சுகன்யா மாதிரி இருக்கா?''

''அவளா? மாணிக்கம் பொண்ணுய்யா...இப்பத்தான் வயசுக்கு வந்திருக்கா...''

''நைச்சியமா பேசி இந்த வாரமே எனக்கு ஆகிற மாதிரி அவள மடக்கி போடுங்கடா...''

''செஞ்சுரோம்ய்யா...''

''இத்தனை வருஷமா நினைச்ச பொண்ணை தொட்டு ருக்கேன், நினைச்ச சரக்கக் குடிச்சிருக்கேன். ஆனா நான்

ஏமாந்தது அந்த தமிழ்ச்செல்வி குட்டிகிட்டதான். நெருங்க முடியலையே...ஆனா பாரு..சிங்கத்துக்கிட்ட தப்பி நரி கிட்ட மாட்ன மாதிரி, அவ இருந்திருந்து அந்த குடிகாரப் பய செல்வத்துக்கு வாக்கப்பட்டுட்டா...அவனைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்...தானும் படுக்கமாட்டான். தள்ளியும் படுக்கமாட்டான்...''

''ஆமாங்கய்யா...''

''இப்பப்பாரு என் ராஜதந்திரத்தை. செல்வத்தோட வீடு, வயல்வெளியெல்லாம் விலைக்கு வாங்கப்போறேன். வித்தக்காச குடிச்சே தீத்து அவனும் தமிழ்ச்செல்வியும் நடுத்தெருல நிப்பாங்க. அதோட சந்தோஷப் பட்டாலும் பட்டுக்குவேன். அப்ப ஆதரவு குடுக்ற மாதிரி கை நீட்டி அவளை படுக்கையில் சந்திப்பேன்...''

''அய்யா...நீங்க சொல்றது கேக்க நல்லாருக்கு. ஆனா நடக்கணுமே?''

''ஏண்டா?''

''சொத்து பூராவும் அவங்க ஆத்தா பேர்ல இருக்கு. அவ எப்ப மண்டைய போடுறது? நீங்க எப்ப அவன் சொத்தை வாங்குறது? தமிழ்ச்செல்விய படுக்கைல சந்திக் கிறது?'' சிரித்தனர்.

''சிரிக்கநீங்களாடா பசங்களா. இங்கதான் நாம கொஞ்சம் சகுனி வேலை பாக்கணும். அந்த பார்வதியம்மா வுக்கு எதிரா செல்வத்தை தூண்டி விடணும். சொத்தை என் பேருக்கு மாத்துடின்னு இவன் அரிவாளைத் தூக்க ணும் ஆத்தாளுக்கும், மகனுக்கும் வெட்டுக்குத்து நடக் கணும். விஷயம் பஞ்சாயத்துக்கு வந்திருச்சுனா மீதிய நான் பாத்துப்பேன்டா...''

''புரியுதய்யா!''



''நீங்க ஏதாவது சொன்னா செல்வம் கேக்கமாட் டான்... அவனோட நெருங்கிய நண்பன் யாரையாவது புடிங்கடா...பலமா காசை வெட்டுவோம்...காரியம் ஜெய மாய்டும்...''

''இன்னைக்கி செஞ்சுடுரம்ய்யா...''

முழுக்கை சட்டையை தாறுமாறாய் மடித்து விட்டிருந் தான் செல்வம். அவனுடன் மூன்று சகாக்கள். மூவரில் ஒருவன் ரவி. பண்ணை முதலாளி, மலையமானின் கையாள்.

நான்கு கிளாஸ்கள் வரவழைத்து விஸ்கியை ஊற்றி னான். பின் கிளாஸ் நிறைய சோடா ஊற்றினான். முதல் சுற்று விழுங்கியவாறே மின்சாரம் பெற்ற விளக்காய் மி ரிர்ந்தனர். செல்வம் மட்டும், ''த்தா...வரவர எத்தனை அடிச்சாலும் கிக் ஏறமாட்டிங்குது!''

''மாப்பிள்ளை பேசாம சாராய பீப்பாய்ல குதிச்சு நீச்சலடிச்சிரு!''

முழு முட்டையை விழுங்கிய வண்ணம் சிரித்தான் செல்வம்.

''ம் ஹூம் ..அதுவும் பிரயோசனப்படாது!''

''மாப்பிள்ளை...கல்யாணமாகி ஒரு வாரம் ஆச்சு. பொண்டாட்டிய தொட்டுகிட்டு பாத்தியா?''

''புல்லா அடிச்சிட்டி வீட்டுக்கு போனா அப்படியே மல்லாந்திர்றேன். முழிப்பேமத்தியானம் பன்னிரண்டு மணிக்குத்தான் வருது. உண்மையச் சொல்லப்போனா என் மூச்சுக்காத்துக்கூட அவ மேல படல ..''

''பாவம் ஏங்கிப்போயிருப்பா .. ஏற்கனவே நான் சொன்ன மாதிரி உன் பக்கத்து வீட்டுக்கு குடிவர வேண் டியதுதான்...''

''சதா என் பொண்டாட்டிய பத்தியே பேசுற. ஒரு மாறுதலுக்கு உன் பொண்டாட்டிய பத்தி பேசுவமா?''

''மாப்பிள்ளை...உனக்கும் கோபம் வருது!''

''பின்ன என்னங்கடா...பொட்டச்சிகளை பத்தி என் கிட்ட பேசுனா...''

''சரி...இந்த விஷயம் வேணாம்...'' என்றவன் முப்பது நொடிகள் கழித்து அழ ஆரம்பித்தான்.

''மாப்பிள்ளை உன்னை நினைச்சா எனக்கு அழு வாச்சி அழுவாச்சியா வருது!''

''ஏண்டா?''

''டெய்லி உன் ஆத்தாக்காரி உனக்கு எவ்வளவுடா பணம் தர்றா?''

''பிச்சைக்காசு நூறு ரூபா...''

''நீ ஒரு கிறுக்குப் பயடா...சொந்த வீட்டிலேயே பிச்சை எடுக்கிற பாரு. உன் வீடு வயல் எல்லாமே உங்கப்பன் சம்பாதிச்சது. அத அந்தாளு சரவுரப்ப உங் காத்தாளுக்கு தானமா எழுதி வச்சிட்டுப் போயிட்டான். உங்காத்தாக்காரி மஞ்சக்குளிக்றா. உங்க பரம்பரைல எந்த பொம்பளைடா எண்பது வயசுக்கு குறைஞ்சு செத்தி ருக்கா... பாத்துக்கிட்டே, இரு. நீ சாகிற வரைக்கும் நூறு ரூபா பேட்டா வாங்கியே சாகப்போற...''

''இப்ப என்னடா பண்ணச்சொல்ற?''

''நேரே போய் உங்காத்தகிட்ட சொத்து பூராத்தை யும் உன்பேருக்குமாத்தி கேளு. கலவரம்பண்ணினாத்தான் வழி பிறக்கும். எதுக்கும் மசியலேன்னா பஞ்சாயத்துக்கு விஷயத்தை கொண்டு வந்திடு!''

''பஞ்சாயத்துக்கு போனா எங்களுக்குத் தானே கேவலம்!''



''ஒண்ணும் கேவலம் கிடையாது. சொத்து உன் பேருக்கு வந்திருச்சுனா, நீ ராஜாடா. சேலம் டவுனுக்கே போய் பாரின் சரக்கடிக்கலாம். நீ உக்காந்து தின்றாலே உன் சொத்து ஏழு தலைமுறைக்கு வரும். சொத்து பிரிக்கச் சொல்லி தூபம் போட்டதே உன் பொண்டாட்டி தான்னு அவபேர் அங்க போய்டும்...எப்படி யோசனை!''

''நாளைக்கே பேசிடுரேன்டா!'' என்றான் செல்வம்.

## 3

வழக்கத்துக்கு மாறாக காலை எட்டு மணிக்கே எழுந்துவிட்டான். செல்வம். பயந்தபடி. பக்கத்தில் வந்தாள் தமிழ்ச்செல்வி.

''காப்பி கொண்டு வரட்டுமா?''

''சீச்சீ அதை எவன் குடிப்பான்?''

''ஏங்க?''

''என்னடி கொஞ்சுற?''

''உங்களுக்காக ஒருத்தி தெனமும் வீட்லக் காத்திருக் கேனே...கொஞ்சம் சீக்கிரம் குடிக்காம வரக்கூடாது?'' வாக்கியத்தை முடிப்பதற்குள் திணறிப் போனாள்.

எட்டி அறைந்தான் செல்வம். ''எடு துடைப்பத்தை. வந்து ஒரு வாரம் ஆவல. அதுக்குள்ள உரிமையா உனக்கு? இனி சோறு மங்கறதத்தவிர மீதி நேரம் வாயத் திறந்தா தோலை உரிச்சிருவேன்... சாணி பொறுக்ன கழுதைக்கு இவ்ள திமிரா?''

பொங்கிப்போனாள் தமிழ்ச்செல்வி.

''உங்க உடம்பு கெட்டுப் போயிடுமேன்னுதான்..''

''உன் கரிசனையத்தூக்கி சாக்கடைல போடு..'' அறையை விட்டு புயலாய் வெளியேறினான்.

''எங்க என் ஆத்தாக்காரியக் காணம்?'' என்றபடியே அம்மாவைத் தேடினான்.

கொல்லையில் சிக்கினாள்.

''என்னடா?''

''உன்கிட்ட கொஞ்சம் பேசணும்...''

''என்ன விஷயம் சொல்லு...''

''த பார் கிழவி! சொத்து பூராத்தையும் எப்ப என் பேருக்கு மாத்தப்போற?''

''என் கண்ணுக்குப் பிறகு உனக்கும், உன் மனைவிக்கும் தானே?''

''பசப்பாதே. உடனே என் பேருக்கு மாத்தியாகணும்...'!

''என் குடிச்சே தீர்க்கவா? உன் வாழ்நாள்ல சொந்தமா ஒரு பைசா சம்பாதிச்சிருப்பியா? குடி வெட்டுச் சீட்டுதான். உண்மையைச் சொல்லவா? உனக்கு குழந்தைன்னு ஒண்ணு பிறந்தா அது பேருலதான் எழுதி வைப்பேன்...''

''தேவையில்லை...உடனே என் பேருக்கு மாத்து!''

''என்னடா மிரட்ற?''

''இல்ல கிழவி உண்மையைத்தான் சொன்னேன். மரியாதையா மாத்திரு!''

''இல்லேன்னா பஞ்சாயத்துக்கு போவியா?''



''ஏய், என்னடி பேச்சு பேசுற?'' பாயிய்ந்து தாயின் குரல்வளையைப் பிடித்தான். தமிழ்ச்செல்வி பதறி ஓடி வந்தாள்.

''அய்யோ. என்னங்க இது விடுங்க!''

மனைவியை எட்டி உதைத்தான்... சீறினான்.

ஆங்காரமாய் பார்வதியம்மாவும் மகனின் குரல்வளையை பிடித்தாள்.

இருவர் பிடியும் இறுகின. இறுதியில் தாயின் பிடி உயர தளர்ந்தான் செல்வம்.

''குடிகாரப்பயலே...இன்னும் கொஞ்சம் இறுக்கினா செத்துடுவ. எந்தத் தாயும் மகனைக் கொன்னதா சரித்திரம் இல்ல. அதனால விடுரேன்!''

குரல்வளையை தடவிவிட்டுக்கொண்டான்.

''வெறும் கறி மீனா தின்னு கொழுத்துப் போயிருக்க கிழவி என்னையே கொல்லப் பாத்தியா? உனக்கு மானம் மருவாதி சூடு சொரணையிருந்தா சொத்தைப் பிரிச்சுக் குடுத்திரு. மூணே நாள் அவகாசம் தரேன்..''

''இல்லேன்னா?''

''இல்லேன்னா நுங்கு சீவுற அரிவாளை எடுத்து உன் தலையைச் சீவிடுவேன் இல்ல நீ தூங்கும்போது தலையணியை வச்சு அழுத்திக்கொல்லுவேன். இல்ல உன் சாப்பாட்ல விஷம் வச்சிருவேன். ஒண்ணு எனக்கு சொத்து வந்தாகணும். இல்ல உன் பிணத்தை கொம்பேறி மூக்கனா நின்னு வேடிக்கை பாக்கணும்..''

''உன்னை பெத்த தாய்டா நான். எங்கிட்டயே இந்த பேச்சு பேசுறியே?''

எதற்கும் கலங்காத மயங்காத வீரப்பெண்மணி பார்வதியம்மா துவண்டு போயிருந்தாள்.

அத்தையின் கழுத்தை நீவிவிட்டாள் தமிழ்ச்செல்வி.

''எனக்கு நம்பிக்கையிருக்கு அத்தை, அவர திருத்திடலாம்!''

''சரிம்மா... நீ போய் வேலைய பாரு ..''

''நீங்க?''

''எனக்கொண்ணுமில்ல... நீ போம்மா...''

தயங்கி தயங்கி தமிழ்ச்செல்வி போனாள்.

பார்வதியம்மா இறுக்கமாய் எதையோ யோசித்தாள்.

நெறிபட்ட அத்தையின் கழுத்துக்கு ஒத்தடம் கொடுக்கலாம் என அரை மணிநேரம் கழித்து பார்வதியம்மாவைத் தேடினாள்.

கட்டின சேலையிலேயே சுருக்கு அமைத்து தூக்கில் தொங்கியிருந்தாள் பார்வதியம்மா!

உலகமே வெடிக்கும் குரலில் வீறிட்டாள் தமிழ்ச்செல்வி.

அதறிபதறிப் வேலையாட்கள் கூடினர்.

சுருக்கு விலக்கப்பட்டு தரையில் கிடத்தப்பட்டாள் பார்வதியம்மா.

அத்தையின் நெஞ்சை அமுக்கி உலுக்கி உயிர் கொண்டு வர முயற்சித்தாள். தமிழ்ச் செல்வி

பிரேதம் வெறுமையாய் அசைந்தது,

ஊர் திரண்டது.

செல்வம் வீடு திரும்பினான்.

பார்வதியம்மாவின் சடலம் கூடத்தில் கிடத்தப்பட்டிருந்தது. அத்தையின் உடலில் முட்டி மோதி அழுது கொண்டிருந்தாள் தமிழ்ச்செல்வி.



மளமளவென காரியங்கள் நடந்தேறின.

நான்கு பெக்குகள் அடித்தபின் மிதந்தான் செல்வம். உடன் மலையமான்.

''உன் கிட்ட கொஞ்சம் பேசணுமே...''

''சொல்லுங்க!''

''உன் சொத்து இந்தக் கிராமத்ல என்னென்ன?'' வரிசையாகக் கூறினான்.

''சரி... இவ்வளவும் சேத்து என்ன மதிப்பு பெறும்?''

''எட்டு லட்சம் பெறும்!''

''எட்டு லட்சம் ..எப்பா... உனக்கு பத்து லட்சம் ரூபா தந்திடுரேன்... சொத்தை குடுத்திரியா?''

''நான் எதுக்கு சொத்தை விக்கணும்?''

''கிராமத்ல வீடு வயல் வச்சு என்ன பிரயோஜனம்? நீ டவுன்ல செட்டில் ஆகலாம். அங்கேயே புது வியாபாரம் தொடங்கலாம் உன் ஆத்தா உன்னாலதான் நாண்டுக்கிட்டான்னு. ஊர் முழுக்கப் பேச்சு. செத்தாலும் அவ ஆவியா வந்து உன்னை பாடாய் படுத்துவா. எனக்கொண்ணுமில்ல எல்லாம் உன் நல்லதுக்குத்தான் ''

''எனக்கு மனசு ஒப்பலை ..''

''செல்வம்! நான் உன் நலம் விரும்பி! உனக்கு ஒரு கெடுதி சொல்லுவேனா?''

இன்னைக்கித்தான் எங்காத்தா மண்டைய போட்ருக்கா' இப்பயே வித்தா ஊர்காரன்க தூத்திருவான்களே!''

''இன்னைக்கேவா உன்னை விக்கச் சொன்னேன்.ஒரு வாரம் போகட்டும். அப்ப பத்திரம் எழுதிடலாம்.

செல்வம் பூம் பூம் மாடு போல் தலையாட்டினான்.

பதிவாளர் அலுவலகம்.

மலையமானும், செல்வமும் காரிலிருந்து இறங்கினர்.

பதிவாளர் மலையப்பனை வணங்கினார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் பத்திரப்பதிவு நடந்து முடிந்தது.

சூட்கேசுகளில் பத்து லட்சத்து ஒரு ரூபாய் வைத்து நீட்டினார் மலையமான்.

செல்வம் பவ்யமாய் பெற்றுக்கொண்டான்.

திரும்பவவும் காரில் ஏறிக்கொண்டனர்.

''செல்வம்! வந்த காரியத்தை வெற்றிகரமா முடிச்சிட்டோம். அதுக்காக ஒரு பார்ட்டி கிராண்ட் ஹோட்டல்ல வச்சிருக்கேன். முடிச்சிட்டு நாளைக்காலை கிளம்புவோம்!''

''சரி!''

அந்த அறைக்குள் நால்வரும் நடந்தனர்.

''என்ன சரக்கு சாப்பிடுவோம்'' ரவியைப் பார்த்து கண் சிமிட்டினார் மலையமான்.

''எப்பவுமே பிராண்டியும் விஸ்கியும் தானா? இன்னிக்கி சரக்கை மாற்றி சாப்பிடுவோம்!''

''அப்படியென்னப்பா புது சரக்கு? நான் சாப்பிடாதது...'' என்றான் செல்வம்.

''வோடகா அல்லது ஜின்!''

''நான் தயார்!'' —செல்வம்.



''நானும் தயார்!'' மலையமான்.

பாட்டில்களும் அசைவ அயிட்டங்களும் வந்து சேர்ந்தன.

''நம்மல்ல யாரு பெருங்குடிகாரன்?'' -ரவி

இன்னொரு ''அதுல சந்தேகம் என்ன? பண்ணையார்தான்...அவர் தண்ணி சாப்பிறதில்ல மகாமன்னன். நம்ம கிராமதல்யும் சரி இந்த சேலம் டவுன்லயும் சரி அவர மிஞ்சிருக்க ஆளில்ல...''

''என்ன இப்படி சொல்லிட்ட? எங்க செல்வத்த பக்கதல வச்சிக்கிட்டு நீ பேசுற பேச்சா இது?''

''அண்ணனை வச்சிக்கிட்டே சொல்றேன்... தண்ணி அடிக்கிற விஷயத்ல எங்க பண்ணையார் கால்தூசி கூட யாரும் பெறமாட்டாங்க!''

''வார்த்தையை அளந்துபேசு. இல்லன்னா நடக்கிறதே வேற!'' -செல்வம்.

எட்டி அறைந்தார் மலையமான்.

''என்னடா பேச்சு பேசுற செல்வம் இன்னிக்கு நம்ம விருந்தாளிடா. அவர்கிட்ட போய் வம்பு பண்ணிக்கிட்டு குடில நான் பெரிய இவர்தான். எவனும் என்கால்தூசி பெறமாட்டான்தான். அதுக்கு! எனக்கு ஒலிம்பிக்ல மெடலா குடுக்கப் போறான்? செல்வம்!''சாரிப்பா...நேரம் காலம் தெரியாம வீரபிரதாபம் பேசிட்டான்... மன்னிச்சிரு!''

உரையாடல் எப்படி தொடரவேண்டுமென்று மலையமான் விரும்பினாரோ அது நடந்தது!

''என்ன பண்ணையாரே.. சாராயத்த குடிச்சு வளர்ந்தவன். தெனம் நான் காலைல பல் விளக்கிறதே விஸ்கி

பிராண்டியிலேதான்... என் உடம்புல ஓடறது ரத்தமில்லை; சுத்தமான சாராயம்! என்னை ஜெயிக்க நீங்கல்ல உங்க பாட்டன் வந்தாலும் முடியாது!"

"ஜாஸ்தியா பேசிக்கிட்டிருக்கிறப்ப டென்ஷன் ஆகி நீயே பேசுன்னு வந்தாச்சு. இனி நானும் பேசிர வேண்டியதுதான் யாரு குடிமன்னன்னு இப்பவே போட்டி வச்சுப்போமா?"

"தாராளமா..."

"பந்தயப் பணம் எவ்வளவு?"

"பத்தாயிரம் ரூபா!" என்றான் செல்வம்.

"பிச்சைக்காக பத்தாயிரத்துக்கு போட்டிக்கு வரதான் தயாரில்லை!"

"சரி ஒரு லட்ச ரூபா..."

"மாப்பிள்ளை பயந்துட்டார் விட்றுங்க பண்ணையாரே!"—தூண்டிவிட்டான் ரவி.

"பின்ன எவ்வளவுப்பா பந்தயம் வெப்போம்...சொல்லுங்க..."

மலையமான் தலையை சிலிர்ப்பியபடி நிமிர்ந்தார்.

"நான் சத்ரியன். போரில் என் உயிரைத்தான் பணயம் வைப்பேன். என் சொத்து மதிப்பு அறுபது லட்சம். வெளிய நிக்ற மாருதிகார் ஒன்னேகால் லட்சம். உன் சொத்த வித்து கைல பத்து லட்சம் வச்சிருக்க. இப்ப பந்தயத்துக்கு வருவோம். ரெண்டு பேரும் அடிச்சா ஒரே சாக்குதான் அடிக்கணும். ஒரே அளவுதான் சோடா கலக்கணும். நீ என்னைவிட ஒரு சொட்டுகூட தண்ணி



அடிச்சிட்டேன்னா என் முழு சொத்தும் வெளிய நிக்ற காரும் உனக்குத்தான். நான் ஜெயிச்சிட்டா உன் பத்து லட்சம் பணம் எனக்குத்தான்..." கார் சாவியை தூக்கி மேஜையில் போட்டார். "நாம ரெண்டு பேருமே பேசின பேச்சு மாறமாட்டோம். போட்டிய ஆரம்பிப்போமா?"

"வேணாம்ப்பா... செல்வம் பயப்படுறாரு!"

"அவன் எதுக்கப்பா பயப்படப்போறான்? பொண்டாட்டிய வேணும்னாலும் சேத்து பந்தயம் வெப்பான்!"

"சேச்சே...அதுதப்பு...அதுதப்பு நம்ம நம்ம பொண்டாட்டி நம்ம நம்ம கிட்டயே இருக்கட்டும்!"

"மலையமான் அவர்களே! போட்டிக்கு தயார்!"

அறைக்குள் ஆல்கஹாலை ஆயுதமாகக் கொண்டு போர் ஆரம்பித்தது.

ஆறு பெக் வரைக்கும் செல்வத்தின் கையே ஓங்கியிருந்தது.

ஆனால் அதன்பின்-

மலையமான் தனது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தார். அவர் பத்து பெக் முடித்துவிட்டு அலட்சியமாக இவனை பார்த்தார்.

எட்டாவது பெக்கிலேயே செல்வம் நிலைதடுமாறினான். கண் சொருகின. நாக்கு இழுத்துக் கொண்டது. உடலும் முகமும் அபாயகரமாய் வியர்த்தது. எட்டாவது பெக்கை முடிக்காமலேயே மேஜையில் தொங்கினான் செல்வம்.

அவ்வளவுதான்! பண்ணையாரை தூக்கி கூத்தாடினார்.

"பண்ணையாருக்கு ஜே!"

பத்து லட்சம் ரூபாய் போனதுடன் அவமானமும் கேவலமும் ஆயுளுக்கும் தொற்றிக் கொண்டதே என்று கதறி அழுதான் செல்வம்.

விதி வினயமாக சிரித்தது!

## 4

வீடே நிசப்தமாய் கிடந்தது. தரையில் படுத்துக் கிடந்தாள் தமிழ்ச்செல்வி. அவளது பெற்றோரும், தங்கைகளும் ஆத்து மேட்டுக்குடிசைக்கு திரும்பி போயிருந்தனர்.

தான் வந்த ராசிதான் பார்வதியம்மாவின் தற்கொலை என்று ஊர் பேசுகிறதே! போதாதென்று சொத்துக்களை விற்கவும் கணவன் விடாப்பிடியாய் சேலம் டவுன் போய் விட்டானே—முழு பணத்துடனாவது வருவானா? அல்லது அங்கேயே குடித்து கும்மாளம் போட்டு வெறுங்கையாய் வருவானா?

செல்வம் வந்துகொண்டிருந்தான், கையை பார்த்தாள், வெறுங்கை.

எழுந்தோடினாள்!

''நேற்றுபோன மனுஷன் இன்னிக்கி ராத்திரி வர்றீங்களா? இடத்த விக்கலல்ல'''

''வித்துட்டேன்!''

''வித்துட்டீங்களா? பணம் எங்க? பேங்க்ல போட்டுட்டீங்களா?'' மறுதலிப்பாய் தலை ஆட்டினான்.

''பின்ன? பின்ன? பணம் என்னாச்சுங்க?''



''தோத்துட்டேன்டி!''

விக்கித்துப் போனாள்.

''அவ்வளவு பணத்தையுமா?''

''ஆமா...''

''சீட்டு விளையாடியா?''

''யார் அதிகமாக குடிக்கிறதுன்னு போட்டி! அதில தான் தோத்துட்டேன்...''

''அய்யோ கடவுளே! யார்க்கிட்ட தோற்றீங்க?'' அலறினாள்.

—''பண்ணையார் மலையமான்ட்ட...''

''சதி பண்ணி உங்களை கவுத்திட்டாங்களே...சொத்த சூதாட எப்படி உங்களுக்கு மனசு வந்துச்சு? அந்த நிலங்களும், வீடும் எத்தனை பேரு உழைப்பை தாங்கியது?''

''சீ. ஒப்பாரி வைக்காதடி நாயே.. நீ ஒரு தோசி முண்டை... நீ ஒரு ஏழரை நாட்டு சனி!''

''நீங்க செஞ்ச தப்புக்கு என் மேல பழி போடுறீங்களே...''

''பேசாதடி!''

''நான் வேணும்னா பண்ணையார்கிட்ட பேசி பணத்தை வாங்கிட்டு வந்திரவா?''

''பெரிய இவ..போய் நியாயம் பேசப் போறா?''

''அப்டின்னா விஷயத்தை பஞ்சாயத்துக்கு கொண்டு வருவோம்...''

''நா விடமாட்டேன். எப்ப தோத்துட்டு பணத்தைக் குடுத்திட்டேனோ அதோடு எல்லாம் முடிஞ்சுபோச்சு.

திரும்ப போய் பிச்சை கேக்றது எனக்கு பிடிக்காது!'' ஆணித்தரமாய் கூறினான் செல்வம்.

மறுநாள் காலை வில் வண்டியில் மலையமான் வந்திறங்கினார். அவருடன் ரவியும், இன்னொரு கைத்தடியும் இருந்தனர். மலையமான் வீட்டுக்குள் பிரவேசித்தார். தமிழ்ச்செல்வியை பார்த்ததும் முகபாவம் மாறியது.

''ஒரு பணக்காரனுக்கு வப்பாட்டியா இருன்னு சொன்னேன். நீ கேக்கலை. ஒரு குடிகாரனுக்கு பொண்டாட்டியாப் போய் என்ன பலனக் கண்ட? இப்பயும் ஒண்ணும் கெட்டுப் போகலை. கன்னி கழியாம இருக்கியாமே? ஒரே ஒரு தடவை வந்து என்னை படுக்கைல சந்திச்சிட்டுப்போ. எல்லா சொத்தையும் திரும்பத் தந்திர்றேன்...''

''அப்படி ஒரு சொத்து திரும்ப கிடைக்கறதைவிட நடுத்தெருல நின்னு பிச்சை எடுத்திரலாம்..''

''அதானே.. பழைய தொழில் மறந்துபோகுமா? உன் கிட்ட என்ன பேச்சு? உன் புருஷன் எங்க?''

ஓடிச்சென்று எழுப்பினாள். பதறி எழுந்தான்.

''என்னடி அவசரம் எழுப்புர? வீடென்ன தீப்பிடிச்சா எரியுது?''

''அதோ அங்க பாருங்க-நடமாடும் தீ!''

திரும்பினான், ''நீங்களா?''

''ஆமா...நானேதான்...''

''என்ன விஷயம்?''

''எப்ப வீட்டக் காலி பண்றன்னு கேக்க வந்தம்!''

''இந்த வீட்ட உங்களுக்கு நான் விக்கலையே!''



''எவன் சொன்னான்? பத்திரத்ல எழுதிருக்கு. அதில நீ-உன் கோவணத்தையும் உன் பீடி சுற்றும் மனைவியையும் தவிர மற்ற எல்லாவற்றையும் எனக்கு விற்று விட்டதாக எழுதிக் கொடுத்திருக்கிறாய்!''

''அடப்பாவி! நம்ப வச்சுக் கழுத்தறுத்து விட்டாயே ..''

''உனக்கு இந்த நிலை தேவைதான். அப்பனும் ஆத்தாவும் கட்டிக்காத்த சொத்தை உன்னால காப்பாற்ற முடியல. அழகான பொண்டாட்டிய வச்சு குடும்பம் நடத்தத் தெரியல. சொத்தை பிரிச்சுக்கோன்னு யாரும் சொல்லிக் கொடுத்தா கிளிப் பிள்ளை மாதிரி கேட்டுர்றதா? நீ இந்த உலகத்ல வாழவே தகுதியில்லாதவன்... உடனே வீட்டைக் காலிசெய்!''

விம்மி அழுதான் செல்வம்.

''கெஞ்சிக் கேட்டின்னா ஒரே ஒரு வாரம் அவகாசம் தரேன் ..''

''தேவையில்ல. இதோ உடனே கிளம்புரோம்!''

செல்வமும், தமிழ்ச்செல்வியும் துரிதமாக இயங்கினர். வீட்டுச் சாமான்கள் வெளியே வந்தன. தமிழ்ச்செல்வியின் பெற்றோர் ஓடிவந்தனர். தள்ளுவண்டியில் வைத்து ஆத்துமேட்டுக் குடிசைக்கு சாமான்களை எடுத்துச் சென்றனர்.

கைகளைப்பிசைந்தபடி அமர்ந்திருந்தான் செல்வம்.

''கவலையே படாதீங்க மாப்பிள்ளை.. நீங்க இங்கேயே தங்கிக்கலாம்!''

''நீங்க?''

''நாங்க வாசல்ல படுத்துப்பம்!''

''இனிமேலாவது நீங்க திருந்தி வந்தா சரி...'' தமிழ்ச்செல்வியின் தாய் சொன்ன வார்த்தை அவனின் தன்மானத்தை துளைத்தது.

பதில் பேசாமல் மௌனித்தான்.

இரவு.

செல்வத்துக்கு கைகால்கள் உதறின. தூங்கும் தமிழ்ச்செல்வியிடமிருந்து விலகி நடந்தான். கழுத்து வரை குடித்துவிட்டு குடிசைக்கு திரும்பினான்.

செல்வம் நாக்கடைத்து கத்தினான். ''குடிக்கக்காசு வேணும். இருக்கிற பணத்தைக் குடுடி!''

தமிழ்ச்செல்வி இறுகினாள்.

''இந்த மூணுமாசத்ல அத்தை எனக்குப் போட்ட நகையையும் வித்துக் குடிச்சிட்டீங்க. இப்ப இருக்கிறது என் தாலி மட்டும்தான். அதயாவது விட்டுவைங்க.

''உனக்கும் எனக்கும் புருஷன்-பொண்டாட்டினு என்ன உறவுமுறை இருக்கு? தாலியக் கழட்டிக் கொடுடி. ஒரு ரெண்டு நாளு தண்ணிபோட உதவும்'''

''எது வேணாலும் செஞ்சிக்கங்க. தாலியக் கழட்டித் தர முடியாது!''

''அதயும்தான் இனைக்கி பாத்ருவோம்!'' வெறித்தனமாக அவள் மீது பாய்ந்தான்.



இருவரும் கட்டிப் புரண்டனர். மிருகத்தனமாய் தமிழ்ச்செல்வியை அடித்தான். அத்தனை அடியையும் வாங்கிக்கொண்டு தாலியைப் பற்றியிருந்த கையை முறித்தான். அலறினாள். பிடிவிலக தாலியை சுண்டி அறுத்தான். தாலி கைக்கு வந்தது. வெற்றி முகமாய் எழுந்தான்.

''ரொம்பதான் அடாவடி பண்ணியே...இப்ப என்னடி பண்ணுவ?'' குடிக்க கிளம்பிப் போனான்.

தமிழ்ச்செல்வி ஒரு மஞ்சள் கயிற்றையும் மஞ்சள் துண்டையும் தேடி எடுத்தாள். தாலி தயார் செய்தாள். சாமி படத்தின் முன் தன் கழுத்தில் தானே மாட்டிக் கொண்டாள். மூன்றாவது தங்கை உள்ளே வந்தாள்.

''தமிழு! ஒரு வேலை இருக்கு. வரியா?''

''எங்க?''

''மலையமான் வயல்ல களை எடுக்கணும். கூலி இருவத்தி மூன்னு ருபா...''

யோசித்தாள். யார் வயலாய் இருந்தால் என்ன? உழைத்தால் காசு...

''வருகிறேன்!'' என்றாள்.

முகத்தை கழுவிக் கொண்டாள். தலைவாரி கொண்டை போட்டுக் கொண்டாள்!

இருவரும் நடந்தனர்.

''தமிழு!''

''என்னடி?''

''கல்யாணத்துக்கு முன்னாடி சந்தோஷமா இருந்த. ஆனா இந்த மூணுமாசமா உன் வாழ்க்கை கண்ணீரும்,

கம்பலையும்தான். அப்டின்னா கல்யாணம் பண்றதே தப்பா?''

''நம்பற மாதிரி ஏழை பொண்ணுகளுக்கு தப்புத் தான்...''

''மாமா திருந்தவே மாட்டாரா1''

''இன்னும் எனக்கு நம்பிகையிருக்கு!''

பேசிக் கொண்டே வந்தவர்களை வயல் குறுக்கிட்டது. மலையமானின் கைத்தடிகள் ஆட்களை களை எடுக்க அனுப்பிக் கொண்டிருந்தனர்.

''மாரியாத்தா நீ போ...பிச்சம்மா நீ போ...மருதாயி நீ போ...ஆங்...யாரு தமிழ்ச்செல்வியா? ச்ச்சூ . உனக்குப் போயி இந்த நிலையா?''

''இந்த உச்சுக் கொட்ற வேலையெல்லாம் என்கிட்ட வச்சிக்காத. எனக்கு வேலை உண்டா இல்லையா அதச் சொல்லு!''

யோசித்தான். ''சரி போய் வேலையைக்கவனி!''

களை எடுப்பு மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது. வில்வண்டியில் வந்திறங்கிய மலையமானிடம் கிசுகிசுத் தான் கைத்தடி.

அவர் ஏதோ சொல்லி அனுப்பினார். கைத்தடி ஒரு நடுத்தர வயது பெண்மணியிடம் காதைக் கடித்தான். அந்தப் பெண்மணி தமிழ்ச்செல்வியிடம் வந்தாள்.

''தமிழ்ச்செல்வி! இங்க வா... அந்த ரூம்ல கொஞ்சம் வேலையிருக்கு!''

ஒண்ணும் பேசாமல் அவளுடன் போனாள். அறைக் குள் போனதும் தமிழ்ச்செல்வியை உள்ளே எட்டித் தள்ளி விட்டு கதவை வெளிப்புறமாய் தாளிட்டாள்.



''வாம்மா...மகாராணி!'' எக்காளமாய் வரவேற்றார் மலையமான். உட்புறமாகவும் பூட்டினார்!

திடுக்கிட்டவள் இறுகினாள்.

போதையுடன் வரப்பில் நடந்து வந்தான் செல்வம்.

''தமிழ்ச்செல்வி எங்க?''

சிறுமி அழுதபடி செட்டை சுட்டிக் காட்டினாள்.

அங்கு நடந்தான். கதவைத் திறக்க முடியாமல் ஜன்னல் வழியாக பார்த்தான்.

தமிழ்ச்செல்வி-மலையமான் உரையாடல் கேட்டது.

''என்னை புரிஞ்சிக்கவே மாட்டியா? அந்தக் குடிகாரப் பயலை கட்டி என்னத்த கண்ட? நீ மட்டும் சரின்னாப் போதும் என் சொத்து பூராவையும் உன் காலடில் வைக் கிறேன் பத்திரத்ல வேணா கையெழுத்துப் போட்டுத் தரவா?''

''உன் சொத்து இல்ல...இந்த உலகத்தையே நீ என் காலடில வச்சாலும் நான் உனக்கு முந்தானை விரிக்கமாட் டேன். என் புருஷனுக்காக இல்லாட்டியும் இந்த தாலீ யோட மகிமைக்காக நா வாழ்ந்தாலும் தமிழச்சி, செத் தாலும் தமிழச்சி!''

பாய்ந்தார் மலையமான். பதறி கத்தினான் செல்வம்.

''கிட்ட வராதே...கிட்ட வராதே!''

அபாயகரமாய் நெருங்கிய மலையமான் வயிற்றில் உதைத்தாள், அடுக்கப் பட்டிருந்த உரமூட்டையை நெத்தினாள். மூட்டைகள் சிதறின. முட்டுக் கொடுக்கப் பட்டிருந்த நீள கட்டையை கையிலெடுத்தாள். மலைய மானின் மீது அடிமேளா நிகழ்த்தினாள்.

சுருண்டார்.

''உன்ன இப்ப என்ன செய்ரேன் பார்!''

அவரின் இடுப்புக்கு கீழ் பகுதியை கட்டையால் நசுக்கினாள். மலையமானின் அலறல் பக்கத்து கிராமம் வரை கேட்டது.

''நாயே! இனி காலம் பூராவும் பொட்டுப் பூச்சியா தேரையா கிட!'' கதவை கட்டையால் உடைத்துத் திறந்தாள். களை எடுத்துக் கொண்டிருந்த பெண்கள் எல்லோரும் குழுமி வேடிக்கை பார்த்தனர்.

''சரியான தண்டனை குடுத்த தமிழ்ச்செல்வி!'' என்றனர்.

ஓடிவந்தான் செல்வம்.

அவளின் முன் மண்டியிட்டான். ''ஆத்தா! என் கண்ணைத் திறந்திட்ட ஆத்தா. ஒரு குடிகாரப் புருஷனைக் கட்டியிருந்தும் வைராக்கியமா இருக்க பாரு என் மனசுல ரொம்ப ரொம்ப உசந்துட்ட. இது நாளு வரைக்கும் பொம்பளைன்னா மட்டம்னு நெனைச்சேன. நடமாடும் தேவதைகன்னு நிரூபிச்சிட்ட. எனக்கும் தண்டனை குடு. என்னையும் திருத்து. என் குடிப்பழக்கத்தை நிறுத்த ஏதாவது வழி பண்ணு. மொத்தத்ல என்னை மனுசனாக்கு ..'' முகத்தில் அறைந்து கொண்டான்.

பேசிக் கொண்டே இருந்தவன் திடீரென்று பயங்கரமாக இரும ஆரம்பித்தான். பதறிப்போய் தண்ணீர் கொடுத்தாள். இருமல் அடங்கவில்லை. உச்சத்தில் வாயிலிருந்து ரத்தம் வழிந்தது. மயங்கி விழுந்தான் செல்வம்.

## 5

படுக்கையில் உரிக்கப்பட்ட வாழை நாராய் கிடந்தான் செல்வம். எல்லா மருத்துவப் பரிசோதனைகளும்



செய்து முடிக்கப்பட்டிருந்தன. வாயைப் பொத்தி அழுது கொண்டிருந்தாள் தமிழ்ச்செல்வி.

பெண் மருத்துவர் தமிழ்ச்செல்வியை தனது அறைக்கு அழைத்தார்.

போனாள்.

''உக்காரு!''

''இல்லம்மா... நிக்ரேன்...''

''நீதான் அந்தாளு பொண்டாட்டியா?''

''ஆமம்மா...''

''உன்பேரு?''

''தமிழ்ச்செல்வி!''

''கவலைப்படாதே. தேவையான மருத்துவம் பண்ணி உன் கணவனை காப்பாற்றிவிடலாம். இதுமாதிரியான பெருங்குடிகாரர்கள் தாம்பத்யத்தில் ஈடுபாடு காட்டமாட்டார்கள். விந்துவில் உயிரணு எண்ணிக்கை குறைவாக இருக்கும். பெரும்பாலும் மலடாகவே இருப்பார்கள். சிகிச்சைக்குப் பிறகு உன் கணவன் குடிக்காமலிருந்தால் உடல்நலம் சீர்படும். உனக்கு குழந்தைப் பாக்கியமும் அமையும்!''

''ரொம்ப டாங்ஸ் டாக்டர்!''

''என் சிகிச்சை மட்டும் போதாது. போதைத் தடுப்பு சிகிச்சை மையத்தில் உன் கணவனை சேர்க்கவேண்டும். அங்கு சில மருந்துகளை தருவார்கள். அதற்குப் பிறகு போதை வஸ்துகளைக் கண்டாலே வெறுப்பு வரும் அதனை மீறிக் குடித்தால் உயிருக்கு ஆபத்தாகும்...''

''அங்கேயே சேத்திடுறேன்...''

''ஈஸியா சொல்லிட்ட, எவ்வளவு செலவாகும் தெரியுமா? கொறைஞ்சது பத்தாயிரம் ரூபா... தயார் பண்ணினவுடனே சொல்லு. மையத்ல சேத்ர்ரலாம்!''

''அதுக்கு நான் என்ன பண்ணறது?''

''அது உன் பாடு, உன் புருஷன்பாடு!''

''ஒரே ஒரு வாரம் டயம் குடுங்க!''

''சரி...புறப்படு!''

படுக்கைக்கு வந்தாள். விழித்திருந்தான் செல்வம்.

''என்ன சொன்னாங்க?''

விளக்கினாள்.

''அவ்வளவு பணத்துக்கு எங்க போறது?''

''கடவுள் விட்ட வழி. இருங்க மதியான சாப்பாடு எடுத்துட்டு வந்துர்ரேன்...'' குடிசைக்கு ஓட்ட நடை நடந்தாள்.

வழியில் ஒரு பெண். ''உன் புருஷனுக்கு எப்படி இருக்கு?''

சொன்னாள்.

''புருஷனோட ஒரே ஒரு நாகூட வாழாம இப்படி தவிட்டுக் குருவி மாதிரி தத்தளிச்சிக்கிட்டு இருக்கியே. உனக்காகவாவது உன் புருஷனை காப்பாற்றி யாகணும்... நீ போ... நாங்க ஒரு வழி பண்றோம்!''

அந்த கிராமத்தில் மொத்தம் 1300 வீடுகள்.

ஒட்டுமொத்தமாய் பெண்கள் கூடி விவாதித்தனர். ஒரு பெண் தனது முந்தானையை நீட்டி பணம் வசூலிக்க ஆரம்பித்தாள். ஒவ்வொரு பெண்ணும் மனம் உவந்து கையில் இருந்த பணத்தை போட்டார்கள்.



'என்னுடைய குடிகாரக் கணவனும் திருந்தட்டும்!' 'இனியாவது தமிழ்ச்செல்வியின் வாழ்வில் வசந்தம் பெருகட்டும்!' 'இந்த வசூலிப்பில் தொடங்கி கிராமப் பெண்களின் ஒற்றுமை ஓங்கட்டும்!'

ஒவ்வொரு பெண்ணும் இப்படி முணகிக் கொண்டு பணம் கொடுத்தனர்.

மொத்தம் 11,682 ரூபாய் வசூலானது. வெளியில் கூட்டமாய். பெண்களின் இரைச்சல். குடிசையை விட்டு வெளியே வந்தாள்.

''தமிழ்ச்செல்வி! இந்தா உன் தேவைக்கு அதிகமாகவே பணம். போய் உன் புருஷனைக் காப்பாற்று!'' வியர்வை நனைந்த கசங்கிய ரூபாய் நோட்டு மூட்டையை நீட்டினர். மிதமிஞ்சிய நன்றி உணர்ச்சியால் பேச்சு வராமல் தத்தளித்தாள் தமிழ்ச்செல்வி.

''எனக்கு ஆயிரம் அக்காமாரா? உங்களுக்கெல்லாம் எப்படி நன்றி சொல்றதுனே தெரியல...''

''பரவாயில்ல. போய் உன் புருஷனைக்கவனி!''

மருத்துவமனைக்கு ஓடினாள். மருத்துவரிடம் பணத்தைக் கொட்டினாள்.

பணம் கிடைத்த விதத்தை தெரிந்து கொண்டதும் நெகிழ்ந்து போனான் செல்வம்.

தடுப்பு மையத்தில் சேர்க்கப்பட்டான். 45 நாட்கள் சிகிச்சை முடிந்தது.

தொப்பை இழந்து ஆளே மெருகேறியிருந்தான். புன்னகையில் ஒரு வசீகரம் தெரிந்தது. கிராமம் திரும்பினர். எக்கச்சக்க வரவேற்பு. ஒற்றைக்கால் வீரன் முன் மனைவியிடம் சத்தியம் செய்தான் செல்வம்.

''இனி ஏழேழு ஜென்மத்துக்கும் குடிக்கமாட்டேன். இது என் மனைவி மீது சத்தியம். நான் மதிக்கும் மண்ணின் மீது சத்தியம்!''

''இதுபோதும் மாமா...''

''மாமாவா?''

''நெஞ்சுல ஆசையும் அன்பும் மீறுச்சுன்னா இன்னும் எப்படியெல்லாமோ கூப்பிடுவேன்!''

''கூப்பிடேன்!''

''குடிசைக்குள் கூப்பிடுறேன்!''

குடிசைக்குள் நுழைந்தனர்.

''இப்பக்கூப்பிடு!''

''ஏய் பனைமரம்! ஏய் நெட்டைக் கொக்கு! ஏய் முறுக்கு மீசை! ஏய் கருப்பண்ணசாமி! ஏய் கறுப்பா! ஏய் ஒட்டகம்!''

''அய்யய்யோ... கேக்க கேக்க காதுக்குள்ன மயில் இறகை வச்சு தடவின மாதிரி கூசுதடி...''

மனைவியின் மார்பில் புதைந்தான். ''ஒரு ஆம்பளைக்கு நிஜமான போதை பொம்பளையின் நூறு இடங்களில் பரவி இருக்குனு இப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்!''

''நூறு இடமா? எது எது?''

''உன் ரெண்டு கண்ணு ரெண்டுகாது ஒரு மூக்கு ஒரு நாக்கு இரு உதடு, இரு இது, இரு அது...''

பேசிக்கொண்டே அவளை அணைத்துக் கொண்டான் நெடுநாளைய தாபம். அன்றைய இரவு அவர்களுக்கு எல்லையில்லாமல் நீண்டது. காதல் தேவதை சிரித்தாள்.

கிராம வளர்ச்சிப் பணிகளை பார்வையிட வந்த கலெக்டரிடம் ஓடிப்போய் கால்களில் விழுந்தாள் தமிழ்ச்செல்வி.



''அய்யய்யே... வயிற்றுப் புள்ளைதாச்சி இப்டி குப்புற விழலாமா?''

மனுவை நீட்டினாள்.

''மனுல என்ன எழுதிக்கே .. சுருக்கமா சொல்லேன்!''

அழுதபடிச் சொல்லி முடித்தாள்.

''நவீன சாவித்திரிதான் நீ. எமனிடம் போராடி புருஷனை மீட்டுவிட்டாய்! கவலைப்படாதே. வெகு சீக்கிரம் சுயதொழில் தொடங்க பேங்க் மூலம் உங்களுக்கு லோன் கிடைக்கும்!''

''ரொம்ப டாங்ஸ் கலெக்டரம்மா...''

''நீ என்ன படிச்சிருக்க?''

''ஒன்பதாம் கிளாஸ் .. ஆனா பெயிலு...''

''உன் பேரென்ன ?''

''தமிழ்ச்செல்வி!''

''தமிழ்ச்செல்வி! நீகூட தபால் மூலம் படிக்கலாம். ஏற்பாடு செய்து கொடுக்கிறேன்!''

''திரும்ப டாங்ஸோ டாங்ஸ்ம்மா...''

சிரித்தபடி கலெக்டர் புறப்பட்டார்.

அவர் போன மறுவாரமே வங்கியிலிருந்து உதவி வந்தது. பல சரக்குக் கடை ஆரம்பித்தனர். திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் சேர்ந்தாள் தமிழ்ச்செல்வி.

பிரசவ வலியால் துடிக்கும் மனைவியை தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடினான்.

சுகப்பிரசவம். பெண் குழந்தை!

''அப்படியே என் அம்மா ஜாடை!''

‘‘சாட்சாத் அவங்களே தான் வந்து பிறந்திருக்காங்க.’’

‘‘அம்மாவா இருக்கும் போது பணிவிடை செய்யல. மகளா வந்திருக்காங்க. இப்பயாவது பணிவிடை செஞ்சிடுரேன். குழந்தைக்கு பேரு பார்வதின்னே வப்போம்!’’

‘‘சரிங்க!’’ சந்தோசித்தாள். குழந்தையைத் தூக்கிக் கூத்தாடினாள்.

-வருடங்கள் கரைந்தன.

எம்.ஏ. முடித்து பின் வக்கீலுக்கு படித்தாள் தமிழ்ச்செல்வி.

வியாபாரம் பெருகி கிளைகளை சேலம் டவுனிலும் தொடங்கினான் செல்வம் இடைப்பட்ட வருடங்களில்-

பண்ணையார் எய்ட்ஸ் நோய் வந்து இறந்துபோனார்.

பண்ணையாரின் மனைவி செல்வத்தின் சொத்துக்களை திருப்பிக் கொடுக்க வந்தாள். பவ்யமாய் மறுத்தான் செல்வம்.

கிராமத்தின் பஞ்சாயத்து தலைவரானான்.

சொல்லி முடித்தார் பஞ்சாயத்துத் தலைவர் செல்வம். கூடியிருந்த மக்கள் கூட்டம் உணர்ச்சிவசப்பட்டு கேட்டது. அவர் எதிரே ஊருக்குள் குடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட மருதையன் நின்றிருந்தான்.

‘‘நீ இந்த ஊருக்கு மாப்பிள்ளையா வந்தவன். அதனால் உனக்கு எங்க ஊரு கட்டுப்பாடு தெரியல. இந்த ஊர்ல யாரும் சாராயம் காய்ச்சவும் கூடாது. குடிக்கவும் கூடாது. மீறி சாராயம் காய்ச்சினா கல்லாலேயே அடிச்சு



கொன்னுருவம். குடிச்சா ரெண்டு தொடைலயும் சூடு போட்ருவோம்.. இந்த கட்டுபாட்டுக்கான மூலத்தை நீ தெரிஞ்சுக்குவேன்னுதான் என் கடந்தகால வாழ்க்கையை சொன்னேன்.

சாராயம், புழுவும் பூச்சியும் நெளியும் சாக்கடை நீர். அதை குடிச்சு குடிச்சு மனசையும் உடலையும் மிருகமாக்கிக்கிறோம். வீட்டுக்கும் நாட்டுக்கும் உபயோகமில்லாத விஷஜந்து ஆய்டுறோம். இந்த மெல்லக் கொல்லும் விஷத்தை உங்களுக்கு கொடுத்துவிட்டு உங்கள் குழந்தைகளுக்கு சோறு போடுகிறது அரசாங்கம். ஆரம்பத்தில் உங்கள் மேல் ஒட்டடை போல் படியும் போதைப் பழக்கம் பின் இரும்புச் சங்கிலியாக உங்களை ஆயுள்கால அடிமையாக்கிவிடுகிறது.

வேண்டாம் பொழுதுபோக்காகவோ, சாகசமாகவோ நட்புக்காகவோ குடி அரக்கனை தொட்டு விடாதீர்கள். நிறைய குடிகாரர்கள் திருந்த தமிழ்ச்செல்விகள் கிடைப்பதில்லை. இனிமேல் குடிக்கமாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடுத்து விட்டு நீ போகலாம். தண்டனை கிடையாது!’’

மருதையுடன் அழுது கும்பிட்டான்.

‘‘மன்னிச்சிருங்கய்யா... இனி அந்த சனியனை மனசாலும் தொடமாட்டேன்!’’

‘‘சந்தோசம். நீ போகலாம். பஞ்சாயத்து இத்துடன் முடிந்தது!’’

வீட்டுக்கு மிடுக்காக நடந்தார் செல்வம். வழியில் எதிர்பட்டோர் வணங்கினர். தமிழ்ச்செல்வி வரவேற்றாள்.

‘‘இன்னிக்கி பஞ்சாயத்து என்ன தலைவரே?’’

''ஒரு குடிகாரனை திருத்தினேன்...''

''மகிழ்ச்சி! ஒன்று நூறாகட்டும்!'' சிரித்தாள் தமிழ்ச் செல்வி. ''நாம சாவதற்குள் குடிப்பழக்கமில்லாத தமிழ் நாட்டை பாத்தாகணும்ங்க!''

''நிச்சயம் சாதிப்போம்!''

செல்வத்தின் கண்களில் நம்பிக்கை மின்னல்!

(முற்றும்)